திராவிடநாடு

11—3—62 | வார வெளியீடு | விலை 16 காசு

அவமானம் வேறேது!

ந. இறைவன், பி. ஏ.,

கல்லாத தமிழ்க் குலத்து அன்னைமாரும்
கன்னலெனப் பொருள்தவழும் சொற்கள் கூட்டி
இன்னமுதைத் தொட்டிலிலே உறங்க வைத்து
இசையமுது பொழிவதனைத் 'தாலாட்டு' எனஉரைத்தார்!
இருநிலத்தின் வாழ்வு இனி இல்லையென்றே
பெருவாழ்வை முடித்திறந்தோர் பெருமை யெண்ணி
வழிகின்ற கண்ணீரில் மிதக்கும் மாதர்
வடிக்கின்ற கவிதையைத்தான் 'ஒப்பாரி' எனஉரைத்தார்!

கல்லாத தமிழ் மகளிர் ஒப்பாரிக்கும்
நில்லாதாம் இந்திமொழி உயர்கவிதை! என்றலும்
வைப்பாராம் பாடமென்று தமிழர் நாட்டில்
வண்ணத்தமிழ் மக்களதைப் படித்தால் அன்றி
வையாராம் வேலைக்கு! வடவர் சொன்னார்!
வையத்தில் நமக்கெதிரி இல்லையென முரசறைந்து
வட இமயம் வென்றவர்கள் வழிவந்த அமைச்சரின்று
வடவர்க்கு அடிமையெனில் அவமானம் வேறேது!

“இலட்சியவாதியின் காதல்”

இரா. எழிலடியான்

“நீங்கள் கல்லூரியில் படிக்கும் போது யாரையாவது காதலித்ததுண்டா?” என்று கேட்டாள், என் மனைவி.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. “என்ன இது, என்றுமில்லாத புதுமாதிரிக் கேள்வி?”

“பிறகு என்ன இது? ஏதோ கடிதம்போல இருக்கிறது. மிகவும் பத்திரப்படுத்தி உங்கள் பெட்டியினடியில் வைத்திருக்கிறீர்களே?”

அவள் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தேன். அது, என் பழைய உணர்வுகளை — உள்ளத்தின் ஒரு கோடியில் புதைந்துகிடந்த நிழலாட்டங்களை மீண்டும் கிளறிவிட்டது; மாலா! சாரங்கன்!!

“படித்துத் தொலையேன்!” என்று நான் அனுமதி கொடுக்கு முன்பாகவே, அவள் கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கிவிட்டாள். என் மனக்கண் முன்பு, அக்கடிதம் விரிந்து சென்றது.

திருச்சி.

அன்பு பாலுவுக்கு,

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு என்னுடைய திடீர்க் கடிதத்தைக் கண்டு திகைப்பாய். ஆனால், நானே என்னுடைய மனப்பாரத்தை, இவ்வளவு நாள் நெஞ்சுக்குள்ளேயே சுமந்து சுமந்து வேதனைப்பட்டதை இனியும் சுமக்கமாட்டாது, அந்தச் சுமையினை இறக்கவே உனக்குக் கடிதம் எழுதுகிறேன். கடிதத்தில் தொடர்ச்சியாக, கோர்வையாக என்னால் எழுத முடியவில்லை. கதையாகவே எழுதுகிறேன். எனக்கும் அதுதான் எளிதாக இருக்கிறது; உனக்கும் படிக்கச் சுவையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பல பொருளாதார நெருக்கடிகளுக்கிடையில் நான் பி. ஏ. பாஸ் செய்ததும், பின் திருச்சியிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் பயிற்சி பெறாத ஆசிரியராகச் சில மாதங்கள் பணியாற்றியதையும் நீ மறந்திருக்கமாட்டாய்.

திருச்சியில் உள்ள புதுமைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்த எட்டு மாதங்களுக்கெல்லாம் பம்பாய்க்கு ஓடினேனல்லவா? நீகூட, இது என்ன பைத்தியக்காரத்தனம்? திருச்சியில் தொண்ணூறு ரூபாய் சம்பாதிப்பதும் ஒன்றுதான்; பம்பாயில் முன்னூறு ரூபாய் சம்பாதிப்பதும் ஒன்றுதான் என்று எழுதியிருந்தாயல்லவா? உண்மையில் நான் சம்பாதிப்பதற்காகப் பம்பாய் போகவில்லை. பள்ளியிலிருந்து ‘டிஸ்மிஸ்’ செய்யப்பட்டேன், தகாத நடத்தைக்காக!

எனக்கே ஆச்சரியமாக இருந்தது, பள்ளித் தலைவர் என்னைக் கூப்பிட்டு அனுப்பியதும்!

“வாங்க, மிஸ்டர் சாரங்கன், உட்காருங்க” என்றார் அவர். பேசாமல் அமர்ந்தேன். என்னையே தலைமுதல் கால்வரை ஒரு நோட்டம் விட்டார். காலம் போய்க்கொண்டே இருந்ததேயொழிய, அவர் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அது என் பொறுமையைச் சோதிக்க ஆரம்பித்தது.

“நான் கேட்கிறேன்னு நீங்க வருத்தப்படக்கூடாது. நீங்க இளைஞர். பி. டி. பயிற்சி பெறாதவர். இப்பதான் கல்லூரி வாசலிலிருந்து வந்திருக்கிங்க பள்ளிக்கூட ஆசிரியர் என்றால் பிறத்தியாருக்கு ஒரு முன்மாதிரியா இருக்கணும். நாலுபேர் ஏதாவது சொல்லும்படியா நடந்துக்கப்படாது”

“ஆமா சார், இப்ப என்ன முறைகெட்டு நடந்துவிட்டேன்?”

“இன்னும் என்ன சார் நடக்கணும்? நீங்களும் அந்த மாலாவும்...”

எனக்குத் தலை ‘கிர்’ரென்று சுற்றியது. என்ன, நானும் மாலாவுமா?

மாலாவும் நானும் பேச்சாளிகள். பேச்சாளிகள் என்றால், ஒருவரிடம் ஒருவர் ‘வளவள’வென்று பேசிக்கொண்டிருப்போம். அவள் தாயற்றவள். தந்தையோ வயதானவர். ஆகவே, அவள் உழைக்கவேண்டியதாயிற்று. அவள் பி. டி. பயிற்சி பெற்றவள்.

மாலாவும் நானும் முதன் முதலில் அந்தப் பள்ளித் தலைவரால்தான் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டோம். “இவர்தான் மிஸ் மாலா, பி. எஸ். சி., பி. டி. நம் பள்ளிக்கூடத்து விஞ்ஞான ஆசிரியை” என்று அவர் அறிமுகம் செய்து வைத்தார். நிமிர்ந்து நோக்கினேன். மையுண்ட அவள் விழிகள் என்னையும் விழுங்கிக்கொண்டிருந்தன. ஏதோ ஒருவித நாணம் அவள் கன்னங்களிலே சாயலாடிக் கொண்டிருந்தது.

“நீங்கள்தான் புது ஆங்கில ஆசிரியரா? வணக்கம்!” புன சிரிப்புடன் அவள் கூறினாள். மல்லிகைச் சரம் கோத்தாற்போன்ற அவள் முத்துப் பற்களின் அழகிலே ஒரு வினாடி நான் சொக்கித்தான் போனேன்.

அன்றிரவுதான் எனது முதற் கதை “சந்திப்பு” பிறந்தது. அவளைத்தான் அதில் கதாநாயகியாகச் சித்தரித்திருந்தேன். அவள் அழகு, அவள் குணம், அவள் எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டும் என்பதையும் மறைமுகமாகத் தெரிவித்திருந்தேன், அதில் துணிந்து அக்கதையை “அல்லி” பத்திரிகைக்கு அனுப்பிவைத்தேன். எப்படியோ

(13-ம் பக்கம் பார்க்க)

ர் 20]   ஆண்டு சந்தா ரூ. 8   ஞா(11—3—62   தனிப்பிரதி 16 காசு   [இதழ் 20-முதல் 28-வரை

வளரும் பாசிசம்!

முதல் ஐந்தாண்டுத் திட்டம்ஒன்றை நிறைவேற்றி விட்டு, 6 மடங்கு உணவுப் பொருள் அதிகரித்து விட்டது என்று ரஷ்யா உலகுக்கு அறிவித்தது!

1947-48 இரண்டாண்டுத் திட்டத்தின் மூலம் 1937-ம் ஆண்டின் அளவைவிட 10 சதவிகிதம் உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்றுபெருமையுடன் அறிவித்தது செக்கோஸ்லேவேகியா! உடனே இரண்டாண்டுத் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டமாக மாற்றினார்கள். அதன் பலன் இரண்டாம் உலகப்போரின் முன்னிருந்த நிலையைவிட 60 சதவிகித முன்னேற்றமும், 1948-ம் ஆண்டைவிட 50 சதவிகித முன்னேற்றமும் கிடைத்துவிட்டது என்று பூரிப்புடன் அறிவித்தார்கள்!

முதல் மூன்ருண்டுத் திட்டத்தின்மூலம் உலகப் போருக்கு முன்பிருந்த நிலையின் அளவைவிடப் பெரு மாற்றமும், தலைக்கு 10 சதவிகிதம் உணவுப் பொருள் கிடைக்கும் வாய்ப்பும் கிட்டி இருக்கிறது என்று போலந்து சரித்திரம் கூறுகிறது!

இப்படி நாட்டை வாழவைக்கத் திட்டம் தீட்டிய நாடுகள் அனைத்தும், உறுபலனை உடனுக்குடனே கண்டு பெருமைப்பட்டிருக்கிறது; நாட்டு மக்களையும் வாழவைத்திருக்கிறது!

ஆனல், உலக அரங்கிலேயே "நம்மைப்போல் யாருக்குண்டு செல்வாக்கு?" என்று கனவுலகத்திலேயிருந்து பேசிக்கொண்டிருக்கும் பாரத நண்பர்களின் ஆட்சியில் மட்டும், பதினான்காண்டுகளாக என்ன கிடைத்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை!

முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேறி, மூன்றும் ஐந்தாண்டுத் திட்டமும் துவக்கப்பட்டிருக்கிறது!

கண்ட பலன் என்ன? Industrial India என்ற வெளியீட்டில் ஒரு பொருளாதார நிபுணர் வெளியிட்டிருக்கும் உண்மையை அப்படியே தருகிருேம். "பொருள்களின் விலை ஏற்றம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைவிட 20 மடங்கு அதிகமாகிவிட்டது. ரூபாயின் மதிப்பில் 20 பங்கு குறைந்துபோய்விட்டது!" இதற்குத்தான கோடி கோடியாகச் செலவிட்டு திட்டம் தீட்டவேண்டும்?

இதிலே ஒரு ஆச்சரியம் என்னவென்ருல், "திட்டங்களால் கிடைக்கும் பலன் எங்கு போகிறது என்பது தான் எங்களுக்கும் தெரியவில்லை!" என்று அரசாங்கமே விழிக்கிறது.

சமீபத்தில் பேசிய அசோக்மேத்தா, இந்தியாவின் பொருளாதாரம் ஒரு பத்துப்பேரிடம் சிக்கிக் கிடக்கிறது என்று பகிரங்கமாக அறிவித்தார்!

யார் அந்த பத்துப்பேர்? பொருளாதாரத்தை முடக்கி வைத்துக்கொண்டு, கொள்ளை இலாபம் அடித்த அந்தப் பத்துச் சீமான்கள் யார்?

பண்டித நேரு, பாரதத்தை சமதர்மப் பூங்காவாக்கப் போகிறேன் என்று மார்தட்டும் நேரத்திலேதான், பத்துச் சீமான்களின் கையிலே பாரத வாழ்வு செத்துக்கொண்டிருக்கிறது என்று அசோக் மேத்தா அறிவிக்கிருர்!

இதற்கு என்ன பொருள்?

முதலாளிகளுக்கு வால்பிடித்து அவர்களைக் கொழுக்க வைக்கிறது, இந்தக் காங்கிரஸ் என்றுதானே பொருள்!

சீமான்களுக்குத் துதிபாடி, அவர்களின் செல்வ வளத்தைப் பெருக்கக் காங்கிரஸ் வாய்ப்பைத் தேடித் தருகிறது என்பதுதானே?

பாசிசம் மெல்ல மெல்லப் பாரதத்தின் கழுத்தைப் பிடித்து நெரிக்கிறது என்றுதானே பொருள் கொள்ள முடியும்!

சீமான் கையிலே நாட்டின் பொருளாதாரம் சிக்கிக் கொண்டதால் சீரழிந்துபோன நாடுகளின் சரித்திரம் தான் நமக்கு நினைவுக்கு வருகிறது!

விலைவாசி ஏற்றம் மிகப் பயங்கர நிலையை எட்டி விட்டது என்று ஆட்சியாளர்கள் உட்படப் பலரும் குறைபட்டுக்கொள்ளுகிருர்கள். ஆனல் அதைத் தடுக்க மட்டும் அவர்களால் முடிவதில்லை!

கிடைக்கும் இலாபம் — முதலாளிகளுக்குச் சேர்ந்து, அவர்களே உற்பத்திப் பொருள்களின் விலை வாசியை நிர்ணயிக்கும் பிர்மாக்களாகிவிட்டனர். அதுபோலவே எல்லாப் பொருள்களின் விலையும் மிக அதிகமாக விற்கின்றன.

இதுதான் முதலாளித்துவத்தின் தவிர்க்கமுடியாத பிணியாகும். எங்கு முதலாளிகளை இழுத்துப் பிடிக்க வக்கற்றதாகச் சர்க்கார் வலிவிழந்துவிடுகிறதோ, அங்கு ஜனநாயகமும் பறிபோய் விடுகிறது.

பாசிசம் என்பதே முதலாளிகள் நிமிர்ந்து நடை போடுவதற்கு ஊன்றிக்கொள்ளும் ஒரு தடி!

அந்தத் தடி, குடியரசுத் தத்துவங்களை அடிக்கும்! கோலேந்தியவர்கள் தன் பக்கம் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் மக்களின் தலையை நொறுக்கும்!

"பாசிசமும் சமுகப் புரட்சியும்" என்ற புத்தகத்தில் ஆர். பி. டட் கூறி இருப்பதைப் போல, "பாசிசம் முதலாளிகளாலும், ஆலையரசர்களாலும், மிட்டா மிராசுகளாலும், பேங்கர்களாலும் நீர் வார்த்து வளர்க்கப்பட்டு ஏழைகளையும், தொழிலாளர்களையும் நசுக்கப் பயன்படுத்தப்படுவது" என்பதைத் தவிர வேறில்லை!

வளம் எல்லாம் பெற்றுவிட்டோம்; வற்றாத செல்வம் ஊற்றென ஓடுகிறது, ஏற்றுமதியின் அளவு ஆண்டுக்காண்டு உயர்ந்துகொண்டே போகிறது.

நமக்குத் தேவையான அளவு போக மீதியை ஏற்றுமதிசெய்து பெரும் வருவாயை உண்டாக்கும் வழி வகை கண்டுவிட்டோம்.

முன்பெல்லாம் நிலவளம் நீர்வளம் என்று பேசிப் பூரிப்படைவர். ஆனால், இன்று நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

நீர்வளமும் நிலவளமும் பழங்கதையாகி, இப்போது **மின்வளம்** பெருகிவிட்டது. மின் வளத்தால் நாம் அடையும் பயன் கொஞ்சமல்ல. மின்வளம் ஒன்று மட்டும் இருந்துவிட்டால், எல்லா வளங்களையும் பெற்றுவிடலாம்.

1951-ல் 12-சதவிகிதமாகக் கிடைத்த மின்வளம் இப்போது—1962-ல் 36-சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. இன்னும் சில ஆண்டுகள்போனால் 60-சதவிகித மின்வளம் கிடைக்கும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எனவே, இனி நமக்கேது குறை என்று குதூகலத்தோடு ஆளவந்தார்கள் பேசக்கேட்கும்போது இனிப்பாகத்தான் இருக்கும்.

ஆனால், இன்றைய நிலைமை என்ன என்பதை ஒரு சிறிது நிதானம் தவறாத நிலையில் நின்று ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு, 1951-ல் இருந்ததைவிட இப்போது 1962-ல் எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் ஒன்றுக்கு ஒன்பதாக விலையேறியிருப்பதைத்தான் காண முடியும்.

இந்த நிலையில் மின் வளப் பெருக்கத்தைக் காட்டிப் பெருமைப்பட்டுக்கொள்வது வேண்டுமானால், ஒன்றுமறியாத பாமர மக்களை ஏமாற்றி ஏதாவது பயன்பெற உதவுமே தவிர, உண்மையான-உருப்படியான நன்மை இந்த மின் வளப் பெருக்கத்தால் ஏற்பட்டிருக்கிறதா என்று ஒரு அன்றாடம் காய்ச்சியைக் கேட்டுப்பாருங்கள். என்ன பதில் கிடைக்கும் அந்த அப்பாவியிடமிருந்து? அன்று ரூபாய்க்கு இரண்டுபடியாவது விற்றது. ஆனால், இன்றோ இத்துணை மின்வளப் பெருக்கத்திற்குப் பின்னரும் படிஅரிசி ஒரு ரூபாய்க்குமேல் விற்கிறதே என்றுதான் சொல்வான்.

எனவே, மின்வளப் பெருக்கத்தால் நாட்டின் வறுமைநிலை மாறவில்லை—குறையவில்லை; மாறாக அந்தப் பரிதாபத்திற்குரிய பஞ்ச நிலை மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை யாரும் மறைக்க முடியாது.

இதே கண்ணோட்டத்தில் இன்றைய காங்கிரஸ் கட்சியைப் பாருங்கள்! அந்த மாளிகையிலே குடியேறி இருக்கும் சீமான்களைப் பாருங்கள்!

பதினைன்காண்டுகளாகக் காங்கிரஸ்காரர்கள் யாரை வாழவைத்தார்கள்? பணக்காரர்கள் பணக்காரர்களாகவே நாளும் மாறுகிறார்கள். ஏழைகள் ஏழைகளாகவே செத்து மடிகிறார்கள்!

இதுவா சோஷியலிசம்?

இதுவா சமதர்மம்?

"கள்ளமார்க்கெட்காரர்களைப் பிடித்து தெரு விளக்குக் கம்பத்திலே தூக்குப்போடுவேன்—இந்தியா சுதந்திரமடைந்து நமது ஆட்சி நடந்தால்!" என்று அன்று பேசிய நேருதான் முதலாளிகளிடம் தேர்தல் நிதியை வாங்கிக்கொண்டு, மற்றக் கட்சிகளுக்கும் இதைப்போல பணம் கொடுக்காதீர்கள் என்று உபதேசம் செய்கிறார்!

உண்மையிலேயே, காங்கிரஸ் கட்சி இந்த நிலைக்கு வந்தது குறித்து காங்கிரசிலே உள்ள ஜனநாயக உள்ளம் படைத்தவர்கள் வெட்கப்பட்டிருக்கவேண்டும்! முதலாளிகளின் அரவணைப்பை மட்டுமே தனது இறுதிப் புகலிடமாகக் கருதிவிட்ட காங்கிரஸ்கட்சி, பாசிசம் வளர வழிவகை செய்வதையே தனது குறிக்கோளாகக் கொண்டுவிட்டதென்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது!

காஞ்சீபுரம்

11-3-'62.

தம்பி !

அறுவடை முடிந்து, கட்டுகளைத் தலைமீது வைத்துக்கொண்டு, மற்றையடிப் பாதையிலே, ஒயிலாக நடந்துசெல்லும் காட்சி காணக்காணக் களிப்பூட்டுகிறதல்லவா. காண்போர் மட்டுமல்ல, கனமான கட்டுகளைச் சுமந்து செல்பவர்களுக்குக்கூடக் களிப்புத்தான். பாரம் தெரியாது, பாதையின் இடர்பாடுபற்றிக் கவலை எழாது. வேலை முடிந்தது, பலனை எடுத்துச் செல்கிறோம் என்ற எண்ணம் செந்தேனாகும். வேறு வேளைகளிலே, இத்தனை கனமானதை எப்படித் தூக்கிச் செல்வது என்ற எண்ணம் எழக்கூடும்; அறுவடை செய்து எடுத்துச் செல்லும் கட்டுகளின் கனம் தூக்கக்கூடியதுதானா என்ற எண்ணமே எழாது. பாடுபட்டோம் பலன் கண்டோம். உழுது பயிரிட்டோம், அறுவடையை எடுத்துச் செல்கிறோம் என்ற நினைப்பு, பாரத்தைக் கவனிக்கவிடாது. அதிலும் வயலையும், அதிலே உழைத்திடுவோரையும், விதையையும் அதனின்றும் கிளம்பிய முளையையும் பக்கத்து வயலுடையார் பழித்துப் பேசக்கேட்டு, மனம் பதறிய நிலையும் இருந்திருப்பின், அறுவடை கணிசமான அளவும், தரமான வகையும் கொண்டதாக இருந்திடின், கட்டுகளைச் சுமந்து செல்வோர் கண்கள், முன்பு பழித்துப் பேசினோர் எங்கே என்றல்லவா தேடும்! ஆகாது என்றனையே! ஐயயே! என்றனையே! வீண்பாடு என்றனையே! விளையாது என்றனையே! விழலுக்கு நீர் இறைக்கும் வீணன் என்று ஏசினையே! பதரப்பா, விதையல்ல என்று பரிகாசம் பேசினையே! பாரப்பா, கட்டுகளை! பாடுதந்த பலன்களை! அவ்வளவும் மணியப்பா! ஆள் தூக்க ஒண்ணாத கனமப்பா! என்றெல்லாம், பழித்தவர்களைக் கண்டு கூறலாமா என்று தோன்றுமல்லவா!! கூறும் உரிமையும் ஏற்படுகிறதல்லவா!!

புல் பூண்டும் முளைக்காது, "புறம்போக்கு, நத்தம் பாழ் என்று கூறினர், முப்போகம் விளைந்திடும் கழனி உடையோர்கள் எனத் தம்மைக் கருதினவர், பாழ் வெளியேயானாலும், பாடுபட்டால் பலன் உண்டு; பாழ்வெளியும் ஈதல்ல, பாங்கான வயலேதான்; பலகாலும் வளம்காண முயலாது விட்டதனால், பாழ்வெளிபோல் தோற்றம் கொண்டதிது என்றுகூறி, கிளறிச் சமனாக்கி கீழ்மண்ணை மேலாக்கி, வளமூட்டும் எரு விட்டு, வகையாக நீர்பாய்ச்சி வயல் உயிர்பெறச் செய்ததனால், வளமாகப் பயிர் ஏறி, அறுவடைக்கு வழி கண்டார். அவரெல்லாம், கட்டுகளைத் தலைமீது கனம்கூடக் கவனியாமல், கொண்டு செல்லும் போதினிலே, குறைகூறியோர் போக்கை எண்ணிச் சிரித்திடாரோ!

ஆனால், அறுவடையைச் சுமந்து செல்பவர்கள், சிரித்திடக்காணோம்! கலகலப்பான பேச்சுமில்லை!! கவலைக் கோடுகள் முகத்தில் காணப்படுகின்றன. உழைத்த

அறுவடையும்—அணிவகுப்பும்

[1]

அலுப்போ? அதுமட்டும்தான் என்று கூறுவதற்கு இல்லை. வேறு ஏதோ ஓர் எண்ணம், மனதிலே குடை கிறது. கடமையைச் செய்கிறார்கள், கட்டுகளைச் சுமந்து செல்கிறார்கள்; குறுநகை இல்லை, குதூகலம் இல்லை; ஏன்?

காரணம் தெரிந்துகொள்ள வேண்டுமா, தம்பி! அதோ, பார்த்தனையா, புங்கமரம்! அதன் நிழலிலே? யாரோ, படுத்துக்கிடக்கிறார்கள். வா! அருகே சென்று பார்ப்போம்!

கரத்திலே அரிவாள்! காலிலே வெட்டு! இரத்தம் கசிந்து இருக்கிறது! கட்டுப் போட்டுக்கொண்டிருக் கிறான்!

விவரம் தெரிகிறதல்லவா? அவனும் அறுவடையில் ஈடுபட்டான், ஆனால் அரிவாள் வெட்டு காலிலே வீழ்ந்தது. மேலால் வேலையில் மும்முரமாக ஈடுபட முடியவில்லை! கீழே கிடத்தப்பட்டிருக்கிறான்.

ஏன், காலிலே வெட்டு விழுந்தது? அறுவடை வேலை அறியானோ? என்றுதானே கேட்கத் தோன்று கிறது? தம்பி! அதற்கான பதில் தெரிய, அவனுடைய மற்றொரு காலை உற்றுப்பார்! பச்சிலைக் கட்டுத தெரி கிறதா? கேள், விவரத்தை! பலரும் அறுவடையில் ஈடு பட்டது போலத்தான் இவனும் ஈடுபட்டான். வேலை செய்துகொண்டிருக்கும் வேளையில் விஷப்பூச்சி ஒன்று அவன் காலைக் கடித்தது; துடித்தான்; நிலைகுலைந்தது; அரிவாள் வெட்டு காலில் விழுந்தது; மேலால், வேலை யில் வெற்றியுடன் ஈடுபட இயலவில்லை. எனவேதான், மற்றவர்போல், அவன் கட்டு எடுத்துக்கொண்டு செல்லவில்லை; புங்கமரத்தடியிலே இருக்கிறான்.

ஆனால், தம்பி! கட்டு எடுத்துச்செல்பவர்கள் முகத்திலே களிப்பு இல்லை; காலில் வெட்டுப்பட்டுக்கிடப்பவன் களிப்புடன் இருக்கிறான்!!

இந்த விசித்திரத்துக்குக் காரணம் புரிகிறதா?

தம்பி! கட்டுக், கலம்காணும்; பட்டபாட்டுக்கேற்ற பலன் கிட்டும் என்றநிலை இருந்திடினும், ஈட்டிய வெற்றி யினை எடுத்துச் செல்பவர்கள், வேலையிலே ஈடுபட்டு, 'வெட்டு' பெற்றுக்கிடப்பவனைக் காண்கிறார்கள்; கலக் கமும் கவலையும் குடைகிறது.

வெட்டுப்பெற்றுக்கிடப்பவனோ, வேலையை முடித்துக் கொண்டு, வீடு திரும்புவோர், வெற்றியை எடுத்துச் சென்றி டும் காட்சியைக் காண்கிறான்; எனவே அவன் மகிழ்ச்சி கொள்கிறான். உடன் பணியாற்றியோர் வெற்றியை எடுத்துச் செல்கிறார்கள்; பழித்தோர் வெட்கிடும் வித மாகப் பலனை எடுத்துச் செல்கிறார்கள்; அறுவடை வேலை அரிய வெற்றியாக அமைந்துவிட்டது; விளையாது என்றார்கள், அறுவடைகிடைத்தது! அதோ கொண்டு செல்கிறார்கள்!!—என்று எண்ணுகிறான்; எண்ணிடும் போதே, காலில் வீழ்ந்த அரிவாள் வெட்டு, அதற்குக் காரணமாக அமைந்த நச்சுப்பூச்சி, எனும் எதனையும் மறந்துவிடுகிறான். வலி தெரியவில்லை; வருத்தம் எழ வில்லை; வேலைமுடிந்தது, வீடு திரும்புகிறார்கள், வெற்றி யுடன் என்று எண்ணிப் பெருமகிழ்வு பெறுகிறான். எமது வயலையும் உழவுமுறையும் வேலைத்திறனையும் கேவலப்படுத்திப் பேசினரே சிலர், அவர் காணட்டும் அறுவடையை எடுத்துச்செல்லும் அணிவகுப்பை, என்று அறைகூவி அழைப்பது போலிருக்கிறது, அவன் பார்வை, புன்னகை.

யாவர்க்கும் முன்னதாக அறுத்தெடுத்துக் கட்டு ஆக்கி, தலை மீது வைத்து வழிநடந்து காட்டவல்ல தோழன், காலில் வெட்டுப்பட்டுக், காரியத்தை முடிக் காமல், இருந்திடும் இந்நிலையைக் காணக்கூடவில்லை, கண் கசிவு நிற்கவில்லை, வேலை ஓடவில்லை, வெற்றிக் களிப்பு இல்லை, வேதனை வேலாகி வாட்டி வதைக்குது, ஐயோ! வீடு நாம் செல்கிறோம் வெற்றிக் கட்டுடனே, உடனிருந்தவன் எங்கே, என ஊரார் கேட்டிடின், உரைத்திடுவது எதனை நாம், உள்ளம் பதைத்திடுதே, வெட்டு அவன் காலில், வேலைமுடியவில்லை, கட்டுக் கொண்டுவர இயலவில்லை அவனாலே; களத்துமேட் டருகே இருக்கின்றான் களைப்புடனே, என்றன்றோ கூற வேண்டும், எப்படிக் கூறுவது; எண்ணும் போதே எமக்கு வெற்றிக் கட்டுகள் யாவும் வீண் என்று தோன் றிடுதே; அவனும் கட்டெடுத்து அணிவகுப்பிலே நடந்தால், அறுவடை, விழாவாகும், அகமகிழ்வுக்கு எல்லையில்லை; இன்று அந்தநிலை இல்லை, என் செய்வோம் ஏங்குகிறோம், என் றெண்ணி நடக்கின்றார், அறுவடையில் வெற்றிபெற் றார். அதனாலேதான் அவர்க்கு, மகிழ்ச்சி துளியும் இல்லை. **மரத்தடிகிடப்போனோ மகிழ்ச்சியினால் துள்ளுகிறான்; அணிவகுத்துச் செல்வது பார், அறுவடையினை எடுத்து; அவர் எந்தன் உடன்பிறந்தார், அவருடனே நானுந்தான், இந்த வயலுக்கு உரியவன்! ஆம்! அவர்கொண்டு செல்லும் அந்த அறுவடை, எமது உடைமை!! கட்டு எந்தன் தலைமீது இல்லை, கவலை இல்லை: கொண்டுசெல்லும் கட்டெல்லாம், என் கட்டு! என்று கூறும், உரிமை எனக்கும் உண்டு! என்று கூறிக் களிப்புடன் இருக்கின்றான். புங்கமரத் தடியில்.**

என்ன தம்பி, யோசனை? எந்த இடத்து வயலைப் பற்றி அண்ணன் இப்படி ஒருபடப்பிடிப்புக் காட்டுகிறான் என்றுதானே யோசிக்கிறாய்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் இப்படி ஒரு காட்சியைப் பார்த்திருக்கிறேன். நான் இப்போது எடுத்துக்காட்டியுள்ளபடியான எண்ணம், அவர்கள்

கொண்டிருந்தனரோ இல்லையோ, நானறியேன். ஆனால், அந்தக் காட்சியைக் கண்டபோது, என் மனதிலே இப்படியெல்லாம் தோன்றிற்று. அது பல ஆண்டுகளுக்கு முன்பு!

பத்து நாட்களுக்கு முன்பு, பல ஆண்டுகளுக்கு முன்பு நான் கண்ட காட்சி என் மனதிலே கிளறிய எண்ணங்களை மறுபடியும் நான் கொள்ளத்தக்க நிகழ்ச்சியைச் சந்தித்தேன். அந்த நிகழ்ச்சிதான் என் தோல்வியும், நமது தோழர்களிலே ஐம்பது பேர் பெற்ற வெற்றியும்.

எனக்குக் களிப்பு, வெற்றி அணிவகுப்புக் கண்டு.

வெற்றி அணிவகுப்புக்கோ என் நிலைகண்டு வேதனை.

அவர்கள் எனக்குக் களிப்பூட்டினர். நானோ? அவர்களுக்குக் கண் கசியும் நிலையைத்தான் தந்தேன்.

என் செய்வது, தம்பி! நான் என் தம்பிகளிடமிருந்து பெறுவது அதிகம்; நான் அவர்களுக்குக் கொடுப்பது குறைவு! அதிலும் இம்முறை, நான் பெருமைப்படத்தக்க பெரு வெற்றிகளைப் பெற்றுக் காட்டி, ஐம்பதின்மர் என்னை மகிழ்வித்தார்கள்; அரசியல் வட்டாரங்கள் பலவற்றையும் நான் பெருமிதம் நிரம்பிய பார்வையுடன் கண்டிட வழிசெய்து கொடுத்தனர்; ஆனால் நானோ, அவர்களும் எண்ணற்ற மற்றவர்களும், கண் கலங்கும் நிலையைத்தான் பெற்றுக் கொடுத்தேன். அதை எண்ணும்போதுதான், நான் வருத்தப்படுகிறேன், வெற்றி பெறவில்லை என்பதனால் அல்ல!! எல்லாக் கிளைகளிலும் மலர் குலுங்கத்தான் வேண்டும் என்பதில்லை, பூத்திருந்தால் போதும். எல்லோருமே வெற்றிபெற்றே தீரவேண்டும் என்பதில்லை. சிலருக்குத் தோல்வி ஏற்படக்கூடும். எதிர்பார்க்கவேண்டியதுதான். ஆனால், என் முன் தாம் ஈட்டிய வெற்றிகளைக் கொண்டுவந்து காட்டிடும் எனதரும் தோழர்களுக்கு, நான் எதனையும் தர இயலாது போயினும், என் தோல்வியின்மூலம் வேதனையையாவது ஏற்படுத்தித் தராமல் இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணுகிறேன்.

இதனை எழுதிக்கொண்டிருக்கும்போது, கீழே செங்கற்பட்டுத் தொகுதியிலே வெற்றிபெற்ற நமது கழகத் தோழர் விசுவநாதன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். கவலை நிரம்பிய நிலையில்! வெற்றிபெற்ற இளைஞர்; பணபலம் மிகுந்த ஒருவருடன் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்; ஆயினும் விசாரத்துடன்தான் இருக்கிறார். என்னைக் கண்டதும், என்ன பேசுவது என்று புரியவில்லை; நான் பேசவைத்தேன்; அந்தப் பகுதி ஓட்டுகள் எப்படி, இந்தப் பகுதியில் வாய்ப்பு எப்படி என்று கிளறிக் கிளறிப் பேசவைத்தேன். மகிழ்ந்து உரையாட அவரால் முடியவில்லை. அவருக்கு உள்ள சங்கடத்தைக் கண்ட பிறகுதான், இதனை எழுத வந்தேன்.

தம்பி! இந்த நிலை, கடந்த ஒரு கிழமையாக இருக்கிறது. இனியும் இதுபோல் இருக்கக்கூடாது என்பதற்காகவே இதனை எழுதுகிறேன். அறுவடை வெற்றியுடன் முடிவுற்றதை எண்ணி அகமகிழ்ச்சி கொள்ளவேண்டிய நேரத்தில், அண்ணன் தோற்றுப்போனானே என்பதனையே எண்ணி எண்ணி ஏங்கிக்கிடப்பது சரியல்ல, முறையல்ல, தேவையில்லை, எனக்குப் பிடித்தமானதுமல்ல.

நச்சுப் பூச்சி தீண்டியதனால், நிலைகுலைந்து, அரிவாள் காலிலே வீழ்ந்து வெட்டு ஏற்பட்டுவிட்டதால், அறுவடையே கெட்டுவிட்டது என்று பொருள்!

பெற்ற வெற்றிகளை எண்ணிப் பெருமிதம் கொண்டு, மாற்றார் கண்டு கலங்கிடும்விதமான வீரப் புன்னகையுடன் ஏறுநடைபோட்டு, அரிமா நோக்குடன் இருந்திடவேண்டிய வேளையில், என் தோல்வியையும், அதுபோன்றே அதிர்ச்சி தரத்தக்க வேறு பல தோல்விகளையும் எண்ணி ஏங்கிக் கிடப்பது நல்லதுமல்ல, என்னை மகிழச் செய்யும் வழியும் அதுவல்ல.

நான் எங்கு இருந்துவிட்டு வருகிறேன் தெரியுமா, தம்பி! அதைச் சொல்கிறேன், பிறகேனும் என் மனப்போக்கின் முழுத் தன்மையை அறிந்துகொண்டு, அமைதிபெறும் முயற்சியில் ஈடுபட வேண்டுகிறேன்.

அரசியல் உலகு, அற்புதங்கள், உற்பாதங்கள், அதிர்ச்சிகள் ஆக மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள், எக்களிப்புகள் எரிச்சலூட்டும் சம்பவங்கள், வெற்றிகள் தோல்விகள் யாவும், நிரம்பிய இடம்.

எல்லாத் துறைகளும் அவ்விதம்தான், என்பாய். ஒரு மாறுபாடு உண்டு. மற்ற எந்தத் துறையினையும் விட, அரசியல் துறையிலே எதிர்பாராத நிகழ்ச்சிகள், ஏமாற்றங்கள், எரிச்சல்கள் நிரம்ப ஏற்படும்; விசித்திரமான உலகு.

விசித்திரமானது அரசியல் உலகு என்பதற்கு வேறெந்த எடுத்துக்காட்டும் வேண்டாம், நான் இப்போது எங்கு சென்றுவிட்டு வந்திருக்கிறேன் என்பதைக்கூறுகிறேன், கேளேன், அது போதும்.

பெங்களூர் நகரில் ஜெய்நகர் என்ற பகுதியில் ஜெய விலாஸ் என்ற இல்லத்தில் தங்கியிருந்துவிட்டு வருகிறேன்!! வேடிக்கை அல்ல, தம்பி! விசித்திரம். ஆனால் உண்மை!!

தோல்வி கிடைத்ததும் நான் சென்று தங்கியிருந்த இடம் ஜெய விலாசம்—ஜெயநகர்!! போதுமா விசித்திரம்.

என்ன செய்துகொண்டிருந்தேன்? பலரும் வந்திருந்து எனக்கு ஆறுதல்கூற, அதைக்கேட்டுத், துயரத்தைத் துடைத்துக்கொண்டு மன அமைதி பெற்றுக்

கொண்டிருந்தேன்போலும் என்று எண்ணுகிறாய்' அதுதான் இல்லை!! பலருக்கும் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தேன். வெற்றிபெற்று, வீடுகூடச் செல்லாமல் என்னோடு வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் மகிழ்ச்சியாக இருக்கும்படி செய்வதிலும், என்னைப்போலவே காலில் வெட்டுப்பட்டுக் கிடக்கும் திருவண்ணாமலைத்தோழர் ப.உ. சண்முகத்துக்கும், வேலூர் சாரநிக்கும் ஆறுதல் கூறுவதிலும் ஈடுபட்டிருந்தேன். அவர்களுக்கு ஆறுதல் எதற்காகக் கூறினேன்? அவர்கள் தமது தோல்வியைப்பற்றி துக்கம் துளைத்த நிலையில் இருந்ததால் என்கிறாயா? அதுதான் இல்லை! என் பொருட்டு அவர்கள் கொண்டிருந்த வேதனையைத் துடைத்து ஆறுதல் அளித்துக்கொண்டிருந்தேன்.

பல ஆண்டுகளாகவே எனக்கு, பேசாமலே பல கூறும் பேருருவாக அமைந்திருக்கும் சிற்பக் கலைச் சிறப்புக்கு ஈடற்ற எடுத்துக்காட்டாக விளங்கிடும் கோமடீஸ்வரர் சிலையினைக் காணவேண்டும் என்ற ஆவல் உண்டு. அந்த இடத்துக்கு அருகேகூடச் சென்றிருப்பேன்; காண வாய்ப்பும் ஓய்வும் கிடைத்ததில்லை. அழகிய சிறு குன்றின்மீது அமைந்திருக்கும் பேசாப் பேருருவை இம்முறைதான், கண்குளிரக் காணமுடிந்தது.

பெங்களூர் நகரிலிருந்து நூறு கல் தொலைவில் உள்ள சீரூர், சிரவணபெல்கோலா என்பது. அங்குதான், வெளிநாட்டு விற்பன்னர்களும் கண்டு வியந்திடும் அந்தச் சிற்பம், இருக்கிறது, குன்றின்மீது. அறுபது அடி உயரம் அந்தப் பேருரு! பிறந்த மேனி! திறவாக் கண்கள், எனினும் கனிவு வழிகிறது! நின்ற நிலை! காண்போரை நின்ற நிலையினராக்கிவிடும் கவர்ச்சி!!

அந்தப் பேருருவுக்குப் பின்னணியாக, நீலநிற வானம்!

தன்னை மறந்த நிலையில் பிறந்த மேனியாய் நிற்கும் அந்தப் பேருரு, மனதினை ஓரிடத்தில் பதியவைத்து, மற்ற எதனையும் எண்ணிடமுடியாத நிலைபெற்று இருக்கும், காட்சி கண்டாரே கருத்தறிவார்; கண்டதனை விளக்கிட இயலாது; உண்மை.

காலடியில், புற்றுகள்! செடி கொடிகள்! செடி கொடிகள் கோமடீஸ்வரரின் காலிலும் கரத்திலும் மார்பிலும் படருகின்றன! அசையா நிலை! உணரா நிலை! மனம் ஓரிடத்திலே முழுக்க முழுக்க ஒன்றிவிட்டதலை, செடி கொடி படருவது பற்றிய உணர்ச்சியே எழவில்லை. செடி கொடிகள் மட்டும் அல்ல, தம்பி! சீறிடும் பாம்புகள்! உடலைச் சுற்றிக்கொண்டுள்ளன! உணர்வு இல்லை! கனிவும் கவர்ச்சியும் மிக்கதோர் நிலையில் பேருரு!!

இவ்வளவையும் இதற்கு மேலாகவும், கல்லுரு காட்டி நிற்கிறது. கண்டு கருத்துப் பெறாதார், நடமாடும் கல்லுரு என்றே கூறலாம்.

உற்று உற்றுப் பார்த்தேன், அப்பேருருவினை! நெருங்கி நின்று பார்த்தேன்! தொலைவிலிருந்து பார்த்தேன். பார்க்கப் பார்க்க மேலும் பார்த்துக்கொண்டிருக்கும் எண்ணம் எழுகிறது.

உறுதி! ஒன்றில் இலயத்துவிட்டால் வேறு எந்த உணர்வும் தீண்டமுடியாத நிலை பெறும் இயல்பு, பேருரு காட்டிடும் அரும்பெரும் பாடம். ஆமாம், தம்பி! தேர்தலிலே தோல்வி என்றால், நெஞ்சிலே துக்கம் துளைக்கிறது என்கிறோமே, பாம்பு சுருட்டிக்கொள்கிறது உடலில், மனம் ஒன்றினிலே இலயித்துப்போனதால், அரவம் தீண்டுவதுபற்றி உணர்வே இல்லை, கண்ட நான், எண்ணிக்கொண்டேன், அந்த உறுதிவேண்டும்; ஒன்றில் மனதைப் பதியவைத்துவிட்டால், வேறு உணர்வுகள் நம்மைத் தீண்டிடும் வலிவற்றுப்போகும்நிலை ஏற்படவேண்டும், என்று விரும்பினேன்,

எனக்காக மட்டுமல்ல, தம்பி! உனக்கும் அந்தநிலை, உறுதி, இருந்திடவேண்டும் என்று விரும்பினேன்.

அந்த எண்ணத்துடன்தான் சிரவணபெல்கோலாவைவிட்டுத் திரும்பினேன்.

இங்கே, நீ இன்னமும் என்பொருட்டு ஏங்கிக்கிடப்பது அறியும்போது, என் மனம் எப்படி இருக்கும்? எண்ணிப்பார், தம்பி!!

குன்றைவிட்டுக் கீழே வந்தால், ஒரு ஊர்வலம் செல்கிறது; வெற்றி ஊர்வலம்!

பிரஜா—சோஷியலிஸ்டு கட்சித்தலைவர் ஒருவர், சிவப்பா என்பவர், தேர்தலில் வெற்றிபெற்றதற்காக அந்த ஊர்வலம்!! பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது!

பெங்களூர் திரும்பிவந்துகொண்டிருந்தோம்; மற்றோர் ஆரவாரமான ஊர்வலம், சுதந்திரக்கட்சியினர் ஒருவர் அந்தானப்பா என்றார்கள், அவருடைய வெற்றி ஊர்வலம். எங்கள் மோட்டார் அதனைக்கடந்து செல்ல இயலவில்லை; சரி, என்று ஊர்வலத்திலேயே சென்றோம்! (ஆகவே அண்ணன் வெற்றி பெற்றிருந்தால், ஊர்வலம் நடந்திருக்குமே என்றுகூட நீ ஆயாசப்படத் தேவையில்லை—ஊர்வலமாகச் சென்றேன்) அதுமட்டுந்தான் என்று எண்ணாதே. பெரிதும் கன்னடத் தோழர்களே அதிகம் உள்ள மாவள்ளி எனும் பகுதியில் உள்ள தி. மு. கழகக் கிளையினர், பெங்களூர் லால்பாக் தோட்டத்தில், எங்களுக்கு ஒரு தேனீர் விருந்து அளித்தனர்.

பார்ப்பவர்களைப் பிரமிக்கவைக்கும், சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியை நான் பலதடவை பார்த்திருக்கிறேன்,

என்றாலும், மறுபடியும் பார்ப்பதில் எனக்கு விருப்பம். இம்முறையும் கண்டேன். பாறைகளையும் கற்குவியல்களையும் குடைந்துகொண்டும், தழுவிக்கொண்டும், தடுமாறிக்கொண்டும், பல்வேறு பக்கங்களிலும் இருந்து, பாய்ந்துவரும், காவிரி, நீர் வீழ்ச்சியாகிடும் இடம், சிவசமுத்திரம். சிறுதுளி பெருவெள்ளம் என்பார்கள். இது பல சிற்றாறுகள் ஒரு பேருநவாகி, இத்தனை பெரிய உருவை நான் தாங்கவல்லேன் அல்லேன் என்று காடும் கற்குவியலும் நிறைந்த மலைமுகடு கூறிட, செல்ல எனக்கா இடமில்லை என்று கூறிச் சினந்து கீழே பாயும் காட்சியே, சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி. மலைமுகடு முழுவதிலும், இங்கும் அங்குமாகச் சலசலவென ஓடிவரும், இந்தக் காவிரியா, மலை அதிர, காண்போர் மனம் அதிர, நீர்வீழ்ச்சியாக உருவெடுத்துளது என்று எவரும் வியப்படைவர். அதனைக் காணும்போதெல்லாம் எனக்கு, சிறுகச்சிறுக, மக்களின் உணர்ச்சி பிறிட்டுங்கிளம்பி என் ஓர்நாள், பெரிய நீர்வீழ்ச்சி போன்றதோர் உருவம் கொள்ளும் என்ற எண்ணம் தோன்றும். இம்முறை அந்த எண்ணம் மிக அழுத்தமாக ஏற்பட்டது.

தம்பி! இப்படி நான் சில நாட்கள் கழித்துவிட்டு, உன்னுடன் உரையாடி மகிழ, பணியாற்றி மகிழ்ச்சி பெற வந்துள்ளேன். பெற்ற வெற்றிகளின் பொருள் எத்தன்மையது என்பதனை நாடறியச் செய்திடும் நற்பணியிலே நாம் இனி ஈடுபடுதல் வேண்டும். சிலர்— என்னையும் சேர்த்தே கூறுகிறேன் — தோற்றனர் — அதனால் என்ன? தம்பி கருணாநிதி கடற்கரைக் கூட்டத்திலே சுட்டிக்காட்டியதுபோல, அந்தத் தோல்வியால் மூண்டிடும் வேதனை, புதிய உறுதியுடன் பணியாற்றி, பழி துடைத்துக்கொள்வோம் என்று சூள் உரைத்துப் பணியாற்றி இப்போது பெற்ற வெற்றியினை விட, அளவிலும் வகையிலும் தரம் உள்ளதான வெற்றியினைப் பெற்றளிக்கும் ஆற்றலை நமக்குத் தருவதாக அமையவேண்டும். ஐயோ தோற்றுப் போனார்களே! — என்று அழுத கண்ணினராக இருத்தல் கூடாது; ஆஹா! தோற்கடித்தார்களல்லவா? என்ற கோபம் கொப்பளிக்கும் கண்ணினராதல் வேண்டும். வெற்றி ஈட்டித் தருவோம்! வேதனையினின்றும் ஓர் புதிய வலிவு பெறுவோம்! என்று உணர்ச்சி பெறவேண்டும். நம்மிலே சிலருடைய தோல்வி, மற்றவர்களைச் செயலற்றவர்களாக்குவதற்கு அல்ல; நமது செயலிலே செம்மையும் திறமும், பக்குவமும் பண்பும் மிகுந்திடச் செய்வதற்கே யாகும் என்பதனை உணர்தல் வேண்டும்.

உமது தலைவர் என்ன ஆனார்? பார் — என்று மாற்றார் எழுப்பும் ஏளனம் — எரிச்சலை மூட்டினால் மட்டும் பலன் இல்லை, தம்பி! வீழ்த்திவிட்டீர்கள் இம்முறை, இனி என்றென்றும் அதுபோல் நேரிட முடியாத நிலைக்குக் கழகத்தின் வலிவினை வளர்த்துக் காட்டுகிறோம், பாருங்கள் என்று அறைகூவல் எழுப்ப வேண்டும்.

நமக்கு ஏற்பட்டுள்ள தோல்விகளுக்கான காரணங்களை — தனிப்பட்டவர்கள் மீது ஐயுறவு கொள்ளாமல்—விருப்புவெறுப்புக் காட்டாமல்— நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும்; எப்படித் திருத்தலாம், முறைப்படுத்தலாம் என்ற நோக்குடன்.

என்னைத் தோற்கடிக்க காஞ்சிபுரம் தொகுதியையே கூட எடுத்துப்பார். தம்பி! நான் இங்கு எவருக்கும், எந்தவிதமான தீங்கும் செய்ததில்லை; என்னால் எவருக்கும் எந்தவிதமான இடர்ப்பாடும் ஏற்பட்டதில்லை; என் பணியிலே மாசு கற்பித்துப் பேசக்கூட அதிகம் பேர் இங்கு இல்லை; எனினும் என்னைப் பெரும்பான்மையினர் ஆதரிக்க மறுத்துவிட்டார்கள். ஏன்?

பணம் வெள்ளம்போல் பாய்ந்தது என்கிறார்கள்.

இருக்கட்டுமே! அதனையும் மீறி அல்லவா, மக்களுக்கு என்னிடம் அன்பு எழவேண்டும். இனி அந்த நோக்கத்துடன் அல்லவா, நான் பணியாற்ற வேண்டும்.

முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் சதிச்செயல்கள், பலப்பல நடைபெற்றன; ஊரறியும் உலகறியும். ஆனால் இவைகளை எல்லாம் முறியடிக்கத்தக்கவிதமாக அல்லவா, என் தொண்டு மக்கள் உள்ளத்தில் என்பால் அன்பு உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அது ஏற்பட வழி என்ன என்பதுதானே நான் ஆராய வேண்டிய பிரச்சினை.

விஷம் என்று தெரிந்தால், அதனை தங்கக் கோப்பையிலே ஊற்றிக் கொடுத்தாலும், பருகிட எவரேனும் இசைவார்களா? இசையமாட்டார்கள். அதுபோலவே, காங்கிரஸ் ஆதிக்கம் ஏற்பட இடம் கொடுப்பது விஷம் குடிப்பதற்குச் சமானம் என்ற உணர்ச்சி மக்களிடம் ஏற்பட்டிருக்குமானால், பணம் கொடுக்கிறார்கள் என்பதற்காகக் காங்கிரஸ் ஆதிக்கத்துக்கு இடம் அளிக்கச் சம்மதித்து இருப்பார்களா? ஒருக்காலும் இல்லை. எனவே, மக்களிடம், காங்கிரஸ் ஆதிக்கம் அறவே கூடாது என்ற எண்ணம், இன்னும் அழுத்தமாக ஏற்படவேண்டும். நமது பிரசாரம் மேலும் செம்மைப்படவேண்டும்.

என் தொகுதி நிலைமையைக்கொண்டு, பொதுவாகச் சொல்கிறேன்; நாம் இதுவரையில், ஊர் நடுவே உள்ள திடல்கள், ஊர்க் கோடியில் உள்ள திடல்கள் இங்கு மட்டுமே கூட்டங்கள் நடத்தி வந்திருக்கிறோம். நெடுஞ்சாலைகளுக்கு இருமருங்கிலும் உள்ள தெருக்களில், நமது கூட்டங்கள் அதிகமாக நடப்பதில்லை, கூட்டம் அளவில் பெரிதாக இருக்காது, அலங்கார ஏற்

பாடுகள் இராது என்ற எண்ணத்தினாலும், திடலில் கூட்டம் நடந்தால், எல்லாத் தெருக்களிலும் இருந்து மக்கள் வந்து கூடுவார்கள் என்ற நினைப்பிலும், ஒவ்வொரு நகரத்திலும் பல பகுதிகளை நாம் கூட்டம் நடத்தாமலே ஒதுக்கிவைத்து விடுகிறோம். எனவே அங்கு அரசியல் விழிப்புணர்ச்சி, புத்துணர்ச்சி மிகமிகக் குறைவாகி, எப்போதோ எக்காரணத்தாலோ ஏற்பட்டுவிட்ட உணர்ச்சி மட்டுமே இருக்கிறது.

நடந்ததைக் கூறுகிறேன். ஒரு நெசவாளியைக் கண்டேன். அவர், நான் காங்கிரசில் நீண்ட காலமாக இருப்பவன். ஆகவே நான் எப்படி, உங்களுக்காக மாற முடியும்? என்று கேட்டார். கோபமாக அல்ல, வெறுப்பாக அல்ல; இயற்கையாக.

மாறமுடியாது என்று கூறுகிறீரே, ஐயா! நீங்கள் பற்றுக் காட்டுகிற, காங்கிரசே மாறிவிட்டதே — கொள்கையில் குணத்தில்; கண்டவர்கள் கூடிக் காங்கிரசைக் கெடுத்துவிட்டார்களே; கெட்டுப்போன பிறகும், காங்கிரசை நான் ஆதரிக்காமல் இருக்கமுடியாது என்கிறீரே, நியாயமா? என்று கேட்டேன்.

தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பு இது.

ஓட்டு வாங்க நான் சாமர்த்தியமாகப் பேசுகிறேன் என்றுதான், அந்த நெசவாளி அந்த நேரத்திலே எண்ணிக்கொண்டிருந்திருப்பாரே தவிர, யோசித்துப் பார்த்திருக்கமாட்டார். தேர்தல் காலத்துப் பேச்சு நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக மக்கள் கருதமாட்டார்கள். ஆனால், சாதாரண காலத்திலே, இந்த வாதத்தை, எவ்வளவு அழுத்தக்காரர் கேட்டாலும், மனம் அசைந்தே தீரும். அதற்கு நாம் நமது கூட்டங்களை, ஒவ்வொரு நகரத்திலும், எந்தப் பகுதியையும் ஒதுக்காமல், எல்லாப் பகுதி மக்களும் கேட்டுப் பயன் பெறத்தக்கவிதத்திலே நடத்த வேண்டும்.

காஞ்சிபுரம் நகரில் எனக்கு ஓட்டுகள் குறைவாகக் கிடைத்த பகுதிகள் யாவும், நமது கழகக் கூட்டங்கள், தொடர்ந்து சாதாரண காலத்தில் அதிகமான அளவில் நடத்தப்படாத இடங்கள்.

இங்கெல்லாம், காங்கிரஸ் கூட்டங்களும் கம்யூனிஸ்டு கட்சியின் கூட்டங்களும்தான் பரவலாக நடந்திருக்கின்றன.

ஓட்டுகள் கிடைத்துள்ள வகையை ஆராய்ந்து பார்க்கும்போது, சென்ற தேர்தலின்போது கழகத்துக்கு அதிக வாக்குகள் கிடைத்த பல இடங்களில், காங்கிரசுக்கு அதற்கு அடுத்தபடியாகவும், கம்யூனிஸ்டுக்கு மூன்றாவதாகவும் ஓட்டுகள் கிடைத்தன; இம்முறை காங்கிரசுக்குக் கிடைத்த வாக்குகள், கழகத்துக்குக் கிடைத்ததைவிட அதிகம்; எந்த முறையில் என்றால், முன்பு காங்கிரசுக்கும் கம்யூனிஸ்டுக்கும் தனித்தனியே கிடைத்த வாக்குகளின் 'கூட்டு', இம்முறை காங்கிரசுக்குக் கிடைத்திருக்கிறது.

இதெல்லாம் காரணம் அல்ல; பல இலட்சம் செலவிட்டார்கள்—என்று கூறுகிறார்கள்.

ஒன்று கூறுவேன் நமது கழகத் தோழர்களுக்கு, பணம் பல இலட்சம் செலவிட்டுத்தான் காங்கிரஸ் தோற்கடித்தது என்றால், நாம் அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

எத்தனைமுறை இதுபோலப் பல இலட்சங்கள் செலவிட முடியும்? எத்தனை இடங்களில் செலவிடமுடியும்? எத்தனை காலத்துக்கு இது நடக்கும்?

எனவே, நச்சுப் பூச்சி தீண்டிய கதை போலாகுமே தவிர, நிரந்தரமான பலத்தை ஒரு கட்சிக்குக் கொடுத்து விடாது. எனவே, நாம் பணத்தைக் கண்டு பயம் கொள்ளத் தேவையில்லை.

முறையாக, முன்னேற்பாட்டுடன் வேலை செய்தால் நிச்சயமாகப், பணபலத்தையும் தோற்கடிக்க முடியும். அதற்கு, என்னசெய்யப் போகிறார்கள் என்பதனை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் வாய்ப்பும் திறமையும்கொண்ட தோழர்கள், நகரின் எல்லாப் பகுதிகளிலும் இருக்க வேண்டும். வதந்திகளுக்கும் செய்திகளுக்கும் வித்தியாசம் தெரிந்த தெளிவுள்ளவர்கள் இந்தத் துறையிலே பணிபுரிந்தால், பணபலத்தை உருக்குலைக்க முடியும். நச்சுப் பூச்சி நாம் ஏமாந்த நேரத்திலேதான் தீண்டும். பணபலமும் அப்படித்தான். பாம்பினைப் பழுதை என்றோ, பழுதையைப் பாம்பு என்றோ கொண்டிடல் கூடாது. திட்டவட்டமான தகவல் சேகரிப்பு இதற்கு அடிப்படையாகத் தேவை.

பணம் பெற்றுக்கொண்டாலும், அதற்காக 'சத்தியம்' செய்தாலும், அது நம்மைக் கட்டுப்படுத்தவிடத் தேவையில்லை, என்ற நிலை, சாமான்யர்களுக்கும், குறிப்பாகத் தாய்மார்களுக்கும் சுலபத்தில் ஏற்படாது.

காஞ்சிபுரம் தொகுதியில் திருப்பதி ஏழுமலையான் படத்தின்மீது சத்தியம் செய்து கொடுத்ததால், தாய்மார்கள் திகில் கொண்டுவிட்டார்கள் என்று ஊரே பேசுகிறது.

இவர்கள் நம்முடைய கூட்டங்களுக்கு வருகிறவர்கள் அல்ல. வந்திருந்தால் இதுபற்றி நாம் பேசியது கேட்டு, தெளிவும் பயமற்ற நிலையும் பெற்றிருக்கக் கூடும்.

எனவே இவர்களின் இந்த மனப்பான்மையை மாற்ற நமது கழகத்துக்கு நிரம்பத் தாய்மார்கள், பிரச்சாரப் பணியில் ஈடுபடவேண்டும்.

நம்மிடம் அந்த அணி சரியாக அமையவில்லை.

அமையாததற்குக் காரணம், நமது கழகத்தவர், தமது இல்லத்துத் தாய்மார்களை, இந்தப் பணியில் ஈடு படுத்தாதது.

ஈடுபடுத்த முடியாததற்குக் காரணம், அரசியலை, நம்முடைய கழகத் தோழர்கள்கூட, ஆடவர்களின் அரங்கம் என்றே இன்னமும் எண்ணிக்கொண்டு, தாம் மட்டுமே அதிலே ஈடுபடுவதுதான்.

இதனை நீக்க இப்போதிருந்தே பாடுபட்டு வெற்றி கிடைக்கவேண்டுமானால், கழகக் கூட்டங்களுக்கு தமது வீட்டுத் தாய்மார்களை, கூடுமானவரையில் அழைத்துக்கொண்டு வரும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரசியல் கூட்டப் பேச்சுக்கள் தாய்மார்களுக்குப் பிடிக்காது, புரியாது என்று சாக்குப்போக்குக் கூறுவது சரியல்ல; அதிலே பொருளும் இல்லை, பொருத்தமும் இல்லை.

ஓட்டுக்குப் பணம் கொடுப்பது எந்த நோக்கத்துடன்? வாங்கினால் என்ன கேடு உண்டாகும் என்பது தாய்மார்களுக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தால், நான் காஞ்சிபுரம் தொகுதியில் தோற்றிருக்கவே முடியாது என்பதை, இந்தத் தொகுதியின் நிலவரம் அறிந்த எவரும் மறுக்கமாட்டார்கள்.

ஒரு கூடை தவிடு தருகிறேன், ஒரு குன்றிமணி தங்கம் கொடு என்றால் கொடுப்பார்களா? கருத்துக்கெட்டவர்கள் கூடத் தரமாட்டார்கள்.

ஆனால், பளபளப்பான செயற்கை வைரத்தைக் காட்டி, அது வைரம் என்றுகூறித் தங்க நகைக்கு ஈடாகத் தருவதாகச் சொன்னால், சிலர் ஏமாந்து போவார்கள்; பலர் சபலம்கொள்வார்கள்.

பணத்துக்காக ஓட்டு கொடுப்பது, தவிட்டுக்காகத் தங்கம் கொடுப்பதாகும் என்பதைத் தாய்மார்களுக்கு எங்கே எடுத்துச்சொல்ல, உணரச்செய்ய, நம்மிடம் அணி இருந்தது? இல்லை! அது இனி அமைக்கப்பட்டாக வேண்டும்.

என் நெஞ்சை மெத்தவும் உருக்கியதும், என் தோல்விபற்றி எனக்கு ஓரளவு வேதனை ஏற்பட்டதும், என்னால் அதற்குக் காரணமாக அமைந்ததும், எது வென்றால், எனக்காக, நகர் முழுவதும் வீடு வீடாகச் சென்று என் துணைவி இராணி ஓட்டுக் கேட்டதுதான். துணையாக அலமேலு அப்பாதுரை அவர்கள், மல்லிகா, எங்கள் ஊர் சரசுவதி வெங்கடேசன், சரசுவதி சிற்சபை, கமலா பாபு, உளுந்தூர்பேட்டை இராஜேஸ்வரி சண்முகம், ஆகியோர் சென்றனர்.

கழகத்துக்கான ஏற்பாடு வேலைகளும், சிக்கல் நீக்கும் காரியமும், மற்றத் தொகுதி வேலைகளும் என்னை அந்த அளவுக்கு, நகரில் ஓட்டு கேட்க இடம் தரவில்லை.

இராணியும் துணையாகச் சிலரும் சென்று ஓட்டு கேட்டதுபோல, பேட்டைக்குப் பேட்டை ஒரு சிறு அணி இருந்திருப்பின், பணம் பலித்திருக்காது.

இது என் தொகுதிக்கு மட்டுமல்ல நான் சொல்வது, எல்லா இடங்களுக்கும்.

சென்ற தடவைகூட இராணி வேலை செய்தது உண்டு, என்றாலும், இம்முறை வெகு உற்சாகத்துடனும், மும்முரமாகவும், முறையாகவும் வேலை செய்ததற்குக் காரணம், சென்ற தேர்தலுக்கும் இந்த தேர்தலுக்கும் இடையில், மகளிர் மன்றக் கூட்டங்கள், கழகக் கூட்டங்கள், ஆகியவைகளிலே பெற்ற கருத்தால் ஏற்பட்ட உணர்ச்சியும், நமது இயக்க ஏடுகளைப் படித்ததால் வந்த உணர்ச்சியும்தான்.

சென்ற தடவை ஓட்டு கேட்டபோது இராணிக்கு இருந்திருக்கக்கூடிய எண்ணம், கணவருக்கு வேலை செய்கிறோம் என்பதுதான்; இம்முறை, கழகத்துக்கு வேலை செய்கிறோம் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கக்கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

இராணி இந்த அளவு பணியாற்றப் பெருந்துணையாக இருந்தது, என அக்காவாகும்.

அவர்கள்போல், மொத்தத்தில் நகரில் ஒரு 50 பேர், தாய்மார்கள் அணி இருந்திருந்தால், 'வெங்கடேசப் பெருமானும் சத்தியமும்' என்ற பேச்சு வலிவிழந்து போயிருக்கும்.

இந்த முறை ஏற்பட்ட இந்தக் குறையைப் போக்கி, அடுத்த தேர்தல் வருவதற்குள் நல்லதோர் தாய்மார்கள் அணிவகுப்பு ஏற்படவேண்டும்.

இந்தத் தேர்தலில் இருந்த அணிவகுப்பு, இருதரப்புக்கும் எப்படிப்பட்டது என்பதனை அடுத்த கிழமை எடுத்துக்காட்டுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

நமது சட்டமன்ற உறுப்பினர்கள்

சென்னை மாவட்டம்

1. திருவல்லிக்கேணி ... இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.
2. ஆயிரம்விளக்கு ... கே. ஏ. மதியழகன் பி.ஏ.
3. மைலாப்பூர் ... அரங்கண்ணல்
4. தியாகராயநகர் ... காஞ்சி மணிமொழியார்

செங்கற்பட்டு மாவட்டம்

1. செங்கற்பட்டு ... சே. கோ. விசுவநாதன்
2. சைதை ... முனு. ஆதி எம.சி.

வட ஆற்காடு மாவட்டம்

1. அரக்கோணம் ... எஸ். ஜெ. இராமசாமி
2. செய்யாறு ... புலவர் கோவிந்தன்
3. வந்தவாசி ... எஸ். முத்துலிங்கம்
4. ஆற்காடு ... முனிரத்தினம்
5. இராணிப்பேட்டை ... அப்துல் கலீல்
6. விரிஞ்சிபுரம் ... சம்பங்கி எம.சி.
7. வாணியம்பாடி ... எம். பி. வடிவேல்
8. திருப்பத்தூர் ... கே. திருப்பதி
9. செங்கம் ... சி. கே சின்னராசு
10. போளூர் ... கேசவன்
11. துரிஞ்சாபுரம் ... எஸ். முருகையன் எம்.சி.

தென் ஆற்காடு மாவட்டம்

1. திண்டிவனம் ... ஆ. தங்கவேல் எம்.சி.
2. வானூர் ... எ. ஜி. பாலகிருஷ்ணன்
3. விழுப்புரம் ... எம். சண்முகம் எம்.சி.
4. நெல்லிக்குப்பம் ... வி. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ., பி.எல்.
5. குறிஞ்சிப்பாடி ... எம். இராசாங்கம்
6. காட்டுமன்னார்கோயில் எம். ஆர் கிருஷ்ணமூர்த்தி
7. கள்ளக்குறிச்சி ... டி. சின்னசாமி

சேலம் மாவட்டம்

1. அரூர் ... சி. மாணிக்கம்
2. ஊத்தங்கரை ... எம். கமலநாதன்
3. கிருஷ்ணகிரி ... பி. வி. சீராமுலு
4. பொன்னுகரம் ... கரிவேங்கடம், பி.எ. பி.எல்.
5. வீரபாண்டி .. எஸ். ஆறுமுகம்
6. இராசிபுரம் ... செங்கோட்டுவேல்
7. சேந்தமங்கலம் ... வி. ஆர். பெரியண்ணன்
8. கபிலர்மலை ... சி. வி. வேலப்பன்
9. மல்லசமுத்திரம் ... ஆர். நல்லமுத்து

தஞ்சை மாவட்டம்

1. தஞ்சாவூர் ... மு. கருணாநிதி
2. ஆடுதுறை ... கோ. சி. மணி
3. பட்டுக்கோட்டை ... வி. அருணசலம்
4. அறந்தாங்கி ... எ. துரையரசன்

திருச்சி மாவட்டம்

1. ஆலங்குடி ... பி. முருகையன்
2. புதுக்கோட்டை ... எ. தியாகராசன்
3. திருச்சி-1 ... எம். எஸ். மணி
4. பெரம்பலூர் ... டி. பி அழகமுத்து
5. வெங்கலம் ... எஸ். சி. மணி
6. லால்குடி ... எ. பி. தருமலிங்கம்
7. அரியலூர் ... ஆர். நாராயணன்
8. ஜெயஙகொண்டம் ... ஜெகதாம்பாள் வேலாயுதம்
9. T. பழூர் ... எஸ். இராமசாமி

மதுரை மாவட்டம்

1. உத்தமபாளையம் ... எம். இராசாங்கம்
2. தேனி ... எஸ். எஸ். இராசேந்திரன்
3. ஆத்தூர் ... வி. எஸ். எஸ். மணி

இராமநாதபுரம் மாவட்டம்

1. திருக்கோட்டியூர் ... எஸ். மாதவன், பி.காம்.

கழக ஆதரவு பெற்றவர்கள்

1. பழனி ... வெங்கிடசாமி
2. திருத்தணி ... சீராமுலு

★

பாராளுமன்றத்தில்

1. தென் சென்னை ... நாஞ்சில் கி. மனோகரன், எம். ஏ.
2. பெரம்பலூர் ... இரா. செழியன், எம் ஏ.
3. கிருஷ்ணகிரி ... க இராசாராம், பி. ஏ.
4. திருவண்ணாமலை ... இரா. தருமலிங்கம்
5. கடலூர் ... இராமபத்திரன்
6. திருப்பத்தூர் ... அரூர் முத்து
7. திருப்பெரும்புதூர் .. சிவசங்கரன் (முன்னாள் மேயர்)

2-ம் பக்கத் தொடர்ச்சி

'அல்லியில்' என்னுடைய 'சந்திப்பு' அச்சாகியது. இது அவளுக்குத் தெரிந்துவிட்டது. பள்ளியில் ஒரு நாள் நான் ஓய்வு அறையில் அமர்ந்திருந்தபோது அவள் வந்தாள். "நீங்கள் கதைகூட எழுதுவீர்களா? என்னிடம் சொல்லவேயில்லையே!" என்றாள்.

"கதையா? அது எல்லாம் என் கிட்டக்கூட வராதே" என்றேன் வேடிக்கையாக.

"என்னிடம் ஏன் பொய் சொல்லுகிறீர்கள்? அதுதான் பியூன் செல்லப்பா சொன்னானே, உங்களுக்கு ஒரு பிரதி 'அல்லி'யும் 25 ரூபாய் மணியார்டரும் வந்திருக்குன்னு."

"செல்லப்பா கவனிச்சுட்டானா?"

"உங்க கதையை நான் படிக்கிறதிலே உங்களுக்கு இஷ்டமில்லை என்றால் நான் கேட்டது தப்பு. என்னை மன்னிச்சுடுங்க" அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் அரும்பி நின்றன. போக எத்தனித்தாள். எனக்குச் சற்று வேதனையாக இருந்தது.

"மிஸ். மாலா, தப்பா எடுத்துக்காதீங்க. அது என் முதல் முயற்சி. அதனாலேதான் வெளியே சொல்ல வெட்கப்பட்டேன். இருந்தாலும் நீங்கள் படித்துப்பார்த்து உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். ஆனால் தயவுசெய்து வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்" என்று கூறியவாறு மேசைக்குள்ளிருந்த 'அல்லி'யையெடுத்துக்கொடுத்தேன்.

மறுநாள், நான் மலைக்கோட்டையில் ஒரு பாறைமீது அமர்ந்தவாறு, தனியே திருச்சி 'சைனா பஜாரின்' அழகைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தேன். கீழேயிருந்த கட்டிடங்களும், ஓடும் வாகனங்களும் ஏதோ நெருப்புப் பெட்டியாலானவை போன்று தோற்றமளித்தன.

"எழுத்தாளருக்குச் சிந்தனை எதைப்பற்றியோ? சிறுகதையா, தொடர்கதையா?" திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தேன். அவள்—மாலா நின்றுகொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு கூடையில் ஏதோ பொருள்களிருந்தன.

"நானும் உச்சிப்பிள்ளையார் கோயிலிலிருந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் தெருவையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே! இந்தப் பாறைகளைக் கேட்டுப் பாருங்களேன். இங்கு உட்காரும் ஆடவர்கள் படபடக்கும் காற்றில் படியேறிப்போகும் பெண்களைப் பார்ப்பதைத்தவிர, வீதியைப்பார்க்கும் 'பைத்தியக்கார' வேலையைச் செய்யமாட்டார்களென்று அவை சொல்லுமே!" நகைச்சுவை ததும்ப அவள் கூறிச்சிரித்தாள்.

நானும் சிரித்துக்கொண்டே, நீங்கள் போவதைப் பார்த்திருந்தேனானால் நான்கூட இந்த உயிரற்ற கட்டிடங்களைப் பார்க்கும் இந்தப் 'பைத்தியக்கார' வேலையைச் செய்திருக்கமாட்டேன் என்றேன். அவள் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தவாறு, குறும்புமிளிரச் சிரித்த அழகை, என்னால் வருணிக்கவே முடியாது, பாலு!

"நிற்கிறீர்களே, உட்காரலாமே" என்றேன். அதே பாறையில் அவளும் அமர்ந்தாள். "பழம் சாப்பிடுங்களேன் என்று கூறி வாழைப் பழத்தை எடுத்து என் கையில் கொடுத்தாள். வழவழப்பான வாழைப்பழத்துடன் அவள் தளிர் விரல்களும் சேர்ந்து என் விரலில் பட்டு, என்னுள் ஓர் புது உணர்வை ஊட்டியது.

"உங்களுக்கு ஆசிரியப்பணி பிடித்திருக்கிறதா? எங்கள் பள்ளிக்கூடத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"உள்ளதைச் சொல்லவேண்டுமென்றால், நான் கல்லூரி வாழ்க்கையில் ஆசிரியத் தொழிலைப்பற்றிக் கேவலமாக நினைத்தேன். ஆனால் வாழ்க்கைப் போராட்டத்தில் பங்கேற்கும்போதுதான் ஏதாவது ஒரு வேலை தற்காலிகமாகவாவது வேண்டும் என்று இங்கு வந்தேன். ஆனால் இப்பொழுது எனக்கு இதுவே போதும் என்று தோன்றுகிறது." "ஏனும்?" என்னையே பார்த்தவாறு, அந்த ஓரவிழிகளின் ஓட்டத்தை என் மீது உலவவிட்டு அவள் வினவினாள்.

"எனக்கு இங்கு ஓய்வு இருக்கிறது. என் இதயத்து உணச்சிகளையும் அதன் போக்குகளையும் புரிந்துகொண்டு அதற்கு மதிப்பளிக்கக் கூடியவர்களிருக்கிறார்கள். அதனால்தான்" என்றேன்.

"மறந்துவிட்டேனே. உங்கள் 'சந்திப்பு' படித்தேன். மிகப்பிரமாதம். இன்னொருமுறைகூடப் படித்துவிட்டுத்தான் திருப்பித்தரப்போகிறேன்."

"நீங்கள் மிக அதிகமாகப் புகழ்கிறீர்கள். அதிலிருக்கும் குறைகளை எடுத்துச்சொன்னால், மறுமுறையாவது திருத்திக்கொள்வேன்."

"சாரங்கன், உண்மையிலேயே உங்கள் எழுத்தும் கருத்தும் எனக்கு நன்றாகப்பிடித்திருக்கிறது. என் அறிவிற்கெட்டியவரை அதில் குறையேதுமில்லை"

"உங்களைப்போன்றவர்களின் பாரபட்சமற்ற விமரிசனம்தான் என் அடுத்த முயற்சிகளுக்குத் தூண்டுகோல். ஆகவே, ஒளிக்காமல் சொல்லுங்கள். நான் எழுதுவதற்குத் தகுந்தவன்தானா?"

"சாரங்கன்! நீங்கள் நன்றாக எழுதுகிறீர்கள் அவ்வளவுதான் எனக்குச் சொல்லத்தெரியும்........ அடடா, வீதிகளில் விளக்கேற்றிவிட்டார்களே, நாழிகையாகிவிட்டது. பிறகு ஒருநாள் சாவகாசமாய்ப் பேசிக்கொள்வோம்."

அவள்புறப்பட்டுவிட்டாள். ஆனால் அவள் விட்டுச்சென்ற புகழ்ச்சியுரைகள் என்னை உச்சியிலே ஏற்றிவைத்து, என்உள்ளே ஒரு இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது.

இப்படியாகத்தான் எங்கள் நட்பு வளர்ந்தது. உமர்கயாம் சித்தாந்தம் முதலான கதைக்கருத்துவரை அலுக்காமல் சலிக்காமல் பேசிக்கொண்டிருப்போம். சக ஆசிரியர்கள்கூட, எங்கள் பேச்சைக் கேட்கநேர்ந்தவர்கள், எங்களை "வேலையற்றதுகள்; பைத்தியங்கள்" என்றுகூடவருணித்திருக்கின்றனர். கதைகளில் வரும் நிகழ்ச்சிகளும் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் எவ்வளவுதூரம் ஒட்டியிருக்கின்றன என்பதுபற்றி அவள் வாதிடும்போது, நானேகூடச் சில சமயங்களில் ஆச்சரியப்படுவதுண்டு, பெண்ணாகிய இவள், இவ்வளவு தெளிந்த கருத்துடனே பேசுகிறாளே என்று!

அடிக்கடி மலைக்கோட்டைப் பாறைமீது சந்தித்துப்பேசிக்கொண்டிருக்க ஆரம்பித்தோம். அவளுடைய இனிமையான பேச்சில் நான் எத்தனையோ மணிநேரங்களை வீணாக்கியிருக்கிறேன். ஒரு இளம் பெண்ணின் அந்தரங்க ஆசைகள் எப்படி முளைவிடுகின்றன, சூழ்நிலை எப்படி அவற்றை நசுக்கிறது என்பனபற்றியெல்லாம் உணர்ச்சிவசப்பட்டு அவள் பேசும்போது நான் அவளுடைய அறிவாற்றலைக்கண்டு வியந்தது அதிகமா அல்லது முகத்தில் நெற்றிக்குமுன் சிதறிநிற்கும் அந்தச் சுருள் மயிர்க்கற்றையை ஒதுக்கியவாறு என்னையே பார்த்து

பேசிக்கொண்டிருக்கும் அந்த அழகிய திருமுகத்தின் ஒளி அழகிலே நான் சிந்தையைப் பறிகொடுத்தது அதிகமா என்று என்னுல் சொல்ல முடியாது.

எங்கள் தொடர்ந்த பேச்சின் விளைவு, அவளை 'நீ' என்று ஒருமையில் அழைத்து உரிமை கொண்டாடிப் பழகும் அளவிற்கு என்னை இட்டுச்சென்றது. ஒருநாள் அப்படித்தான் நாங்கள் இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

"நீங்கள் முதல்முதல் நம் பள்ளிக்கூடத்துக்கு வந்தது எனக்கு நினைவிருக்கிறது. அந்தக் காட்சி இன்னும் என் நினைவைவிட்டு நீங்காமல் கண்முன்பு நிற்கிறது'' என்ருள்.

''எப்படி? கல்லூரி மிடுக்குடனும், வாத்தியாராகப்போகிறோமே என்ற வருத்தத்துடனும் அசடு வழிந்த நிலையில் வந்தகாட்சியா?'' என்றேன்.

"அல்லவே அல்ல. உயிர்ப்பும் உணர்ச்சியும்கொண்ட சமுகசேவகரைப்போல, இலட்சியமும் உறுதியும் தொனிக்கும் முகபாவத்துடன் நீங்கள் வந்தீர்கள். என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தியபோது, ஆராய்ச்சிக் கண்கொண்ட அறிஞரைப்போன்று, ஆனல் அதே நேரத்தில் நட்புரிமையுடனும் கவனித்தீர்கள். நீங்கள் வந்தபிறகுதான் பள்ளிக்கூடத்திலேயே ஒரு புத்துணர்ச்சி.

"ஏனே என்னை அதிகமாகப் புகழ்கிருய் மாலா. உண்மையிலேயே உலகத்தில் யாராலும் விரும்பப்படாத ஒரு சாதாரண ஆள் நான். முரட்டுத்தனம் நிரம்பிய பைத்தியக்காரத்தனமானது என்று சமுதாயத்தால் கருதப்படுகின்ற சில இலட்சியங்களுக்காக நான் வாழ விரும்புகிறேன. பேசும் மொழிக்கும் பிறந்த நாட்டிற்கும் என்னுல் ஆற்றப்பட வேண்டிய இன்றியமையாத கடமைகள் பல இருப்பதாக உணர்கிறேன். பிறரால் அதைப்புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே அவர்களுக்கு என்னையும் பிடிப்பதில்லை,''

"உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது!'' தன்னிரு கைகளையும் கொண்டு முகமலர் பொத்தி, விரல் இடுக்குவழியே கவனித்தவாறு அவள் சொன்னுள்.

"அப்படியானுல்?''

"சமயம் வரும், அப்போது சொல்லுகிறேன்''

"இப்போது சொல்லமாட்டாய்?''

"............''

அந்தச் சமயம் இன்னும் வரவில்லை; அவளும் எதுவும் செல்லவில்லை.

"நம் பள்ளிக்கூட நிர்வாக போர்டு தலைவரே இதுபற்றிப் புகார் செய்திருக்கிருர்'' இவ்வாறு பள்ளித் தலைவர் சொன்னதும் நான் மாலாவைப் பற்றிய என் நினைவு ஓட்டங்களினின்று திரும்பவும் பள்ளித் தலைவரின் அறைக்கு வந்து சேர்ந்தேன்.

"அதற்கு நான் என்ன சார் செய்யட்டும்? ஒரு ஆணும் பெண்ணும் நெருங்கிப் பேசினுல், உடனே தப்புக் கணக்குப் போடாவிட்டால் சிலருக்குத் தூக்கம் வராது. நாம் நம்ப அக்கா, தங்கைகூடப் பேசவில்லையா, சேர்ந்து வெளியே போகவில்லையா? நாம் இம்மாதிரி இருப்பதால்தான் பின்னேக்கிப் போகிறேம். அமெரிக்காவைப் போன்ற மேலை நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணம்......''

"மிஸ்டர் சாரங்கன், நீங்கள் இன்னும் சிறுபிள்ளையாகவே இருக்கீங்க. அந்தத் துடிப்பிலேயே பேசிறீங்க. எல்லாரும் இங்கு அமெரிக்கராகிவிட முடியுமா? உலகத்தைப் புரிந்துகொள்ள உங்களுக்கு அனுபவம் போதாது. ஆனுலும் பள்ளிக்கூட நிருவாக போர்ட் தலைவர் உத்தரவுக்கு மாருக நடக்கவும் என்னுலே முடியாது. ஆகவே நீங்கள் விலகல் கடிதத்தைக் கொடுத்துவிடுங்கள். உறுதியும் தன்னம்பிக்கையும் சுறுசுறுப்பும்கொண்ட இளைஞர் நீங்கள். இந்த வேலையை உதறித் தள்ளிவிட்டுப் போனுல் எத்தனையோ வேலைகள் வந்து காலடியில் விழும். ஆகவே......''

நான் நேரே என் அறைக்கு வந்துவிட்டேன். உடனே ஒரு கால் கடுதாசியில் "வேலை மறுப்பை'' எழுதி அனுப்பிவிட்டு, அன்று மாலை மலைக்கோட்டைக்குப் போனேன், அமைதி நாடி. அவள் வந்திருந்தாள். அவள் முகம் அழுது வீங்கியிருந்ததற்கு அடையாளமாக, கன்னங்கள் உப்பியிருந்தன. என்னைக் கண்டவுடன் அவள் கண்கள் கலங்கின. ஓரிரு கண்ணீர்த் துளிகள் இமைகளின் ஓரங்களில் நின்று நர்த்தனம் புரிந்துகொண்டிருந்தன, எனக்குப் பேச நா எழவில்லை. அவளுக்கும் அப்படித்தான் போலும். "சாரங்கன்'' என்று ஆரம்பித்தவள் அடுத்த விளுடி "கோ''வென்று வாய்விட்டே அலற ஆரம்பித்துவிட்டாள், கைகளினுல் முகத்தை மூடிக்கொண்டு.

அந்தச் சின்னஞ்சிறு முகத்தை என் இருகைகளாலும் தாங்கிப் பிடித்து, பீறிவரும் அந்தக் கண்ணீர் வெள்ளத்தின் தோற்றுவாயை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று எனக்குக் கொள்ளை ஆசைதான். இதயத்தின் பொருமலை ஆற்றமாட்டாது கண்ணீரின் உருவத்திலே தன் துக்கத்தை வெளிப்போக்கும் அவள் கன்னத்தின் சூட்டோடு என் கன்னத்தையும் ஒட்டி எங்கள் கண்ணீரைக் கன்னங்களிலே சங்கமம் செய்துகொண்டே, அவள் அழகான தலைமயிரைக் கைகளினுல் கோதிவிட்டு அந்தத் துயருறும் தூய உள்ளத்தைச் சாந்தியாக்க என்னுள்ளே ஒரு வெறி எழும்பியது. ஆனுலும் சூழ்நிலை?

"மாலா, நான் இனிமேல் பள்ளிக்கூடத்துக்கு வரமாட்டேன். வேலை மறுப்புச் செய்துவிட்டேன். துக்கத்தை அடக்கிக்கொண்டு எப்படியோ சொன்னேன்.

"கேள்விப்பட்டேன். என்னுல் உங்களுக்கு ஏற்பட்ட......''

"சேச்சே, என்ன பேச்சு இது, மாலா? நம்மை உலகம் புரிந்துகொள்ளவில்லையானுல் அதற்கு நாமா பொறுப்பாளி!

"வேலையை விட்டு விட்டீர்களே, இனி?''

"உலகம் பெரிது மாலா. ஒரே பொருளை நம்பியோ, சார்ந்தோ இருந்தால் யாரும் வாழமுடியாது. விரைவில் எங்காவது வேலை கிடைக்கும் என்று நம்புகிறேன். நாளை இரவே சென்னை போகிறேன். உன் இதயத்தின் ஒரு மூலையில் நினைவு வைத்துக்கொள், சாரங்கன் என்ற இளைஞன், உலகத்தின் உணர்ச்சிகளை மதிக்கத் தெரிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளாததனுல் துன்பத்திற்காளானுன். ஆனுலும், அவன் நல்லவன் என்பதை மறவாதே. நான் வருகிறேன்.''

"சாரங்கன்'' என்ற வார்த்தையுடனே அவள் விம்மும் ஒலியும், கடிதம் போடுங்கள் என்ற அவள் குரலும் எனக்கு வெகு தெளிவாகக் கேட்டன.

பம்பாயிலுள்ள ஓர் தனியார் நிறுவனத்தில் எனக்கு வேலை கிடைத்தது. உடனே அவளுக்கு என் ஆசை அத்தனையும் தேங்க ஒரு மடல் வரைந்தேன். "அன்பு மாலாவுக்கு'' என்று ஆரம்பித்து. பம்பாயிலுள்ள என் பணி, சூழ்நிலை முதலியன பற்றியெல்லாம் விவரித்திருந்

தேன். அவள் என்ன செய்கிருள், பள்ளிக்கூடம் எப்படியிருக்கிறது என்பனபற்றியெல்லாம் வினவி எழுதியிருந்தேன்.

என் கடிதத்துக்கு அவள் உடனே பதில் எழுதவில்லை. தபால்காரனை எதிர்நோக்கி நான் ஏங்கியதுதான் மிச்சம். 22 நாட்களுக்குப் பிறகு அவள் எழுதியிருந்தாள்.

"அன்புள்ள சாரங்கனுக்கு, நலம். கடிதம் கண்டேன். மகிழ்ச்சி. உங்கள் வாழ்வில் வளம் பெருக என் வாழ்த்துக்கள். இங்கு என் வாழ்வில் குறிப்பிடத்தக்க அளவில் ஏதுமில்லை. உப்புச் சப்பற்ற வாழ்வு; ஏதோ வாழ்கின்றேன் பிற, உங்கள் கடிதம் கண்டு"

எனக்கு அக்கடிதம் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. என் ஆசைகள்தான் எத்துணை? அவளிடம் அதன் பிரதிபலிப்புகள் எதையும் காணேமே! எண்ணி எண்ணி ஏங்கினேன். எத்தனையோ நாட்கள் உறக்கமின்றி வருந்தினேன். மீண்டும்கூட ஒரு கடிதம் எழுதிப் பார்த்தேன். ஆவல்தான் நாளுக்கு நாள் தபால்காரனைப் பார்க்கும்போது அதிகமாகியதேயொழிய, பலனென்னவோ, கிணற்றில் விட்டெறிந்த கல்தான்.

மன உளைச்சலின் விளைவு, பணியைக்கூட என்னல் தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. ஆகவே, நான் நேரே கிளம்பித் திருச்சிக்குச் சென்றேன். பாலு! நான் அங்கே எதைக் கண்டிருப்பேனென்று எண்ணுகிருய்? அவளுக்கோ அல்லது அவள் தந்தைக்கோ உடல்நிலை பாதிக்கப் பட்டிருக்கலாம் என்று நம்பித்தான் அங்கே பதறிப்போய் ஓடினேன். ஆனல் நான் கண்ட காட்சி!

நிலைக் கண்ணுடி முன்பு நின்று அவள் ஒப்பனை செய்துகொண்டிருந்தாள். தங்கச் சிலைபோன்ற அவள் உடலமைப்புக்கு ஏற்ருற்போல அவள், மஞ்சள் நிற "ஷிபான்" சேலையும் பச்சை நிற 'கிரேப் சோலி' யும் அணிந்திருந்தாள். காலிலோ புத்தம் புதிய செந்நிற குதியணி!

உள்ளே நுழைந்த என்னைக் கண்டவுடன் திடுக்கிட்டாள். "நீங்களா? எப்பொழுது வந்தீர்கள்?" மேலெழுந்தவாரியாக வினவினள். நான் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். என் கண்களோ, ஏதோ ஒரு விசித்திரப் பொருளைப் பார்ப்பதுபோல அவளைத் தலைமுதல் கால்வரையுள்ள அலங்காரத்தை நோட்டமிட்டது. கண் விழிகளின் கூர்மையோ, அவள் வட்ட முகத்தின் ஒளிக்குக் காரணமான புன் சிரிப்பு வலையினின்று சற்று விலகி, அவள் கண் விழிகளின் பார்வையை படம் பிடிக்க முயற்சித்தது.

அதுவரை என்னைத் தேள் கொட்டியதில்லை! அந்த மெல்லிய கண்ணுடி "ஷிபான்", எடுப்பாக சோலிமேல் அவள் அணிந்திருந்த பல பொன்னகைகளுடன் பெண்மையின் வேலியையும் எனக்குக் காட்டிவிட்டது! ஆம் அது ஒரு தாலி!

நான் தலையைக் குனிந்துகொண்டேன். மன்னியுங்கள். நீங்கள் திருமணம் ஆனவரென்று எனக்குச் சொல்லவேயில்லையே. எல்லோரும் 'மிஸ். மாலா' என்றுதானே அழைத்து வந்தார்கள்?"

"இல்லை. மிஸ்டர் சாரங்கன். சென்ற வாரம் வரை நான் மிஸ் மாலாதான். கடந்த ஒரு வாரமாகத் தான் திருமதி மாலா-இராகவேந்திரன்"

"யார், இராகவேந்திரனு? ஒரு அப்பாவி இளைஞன்மேல் வீண் பழி கட்டி விரட்டிய, புதுமைப் பள்ளிக்கூடத்தின் நிர்வாக போர்ட்டின தலைவன் இராகவேந்திரனு?

"இல்லை. இனிக்க இனிக்கப் பேசும் இளைஞர்கள், சிறைச்சாலைக்களியையும் தின்று வந்தவர்கள் என்று எடுத்துச்சொன்ன உத்தமர்!"

"என்ன?" என் வாய் அடைத்துப்போயிற்று. ஆம்! அது உண்மைதான். உனக்குததான் தெரியுமே அது. நான கல்லூரியில் பீ. ஏ. முதலாண்டில் படித்துக்கொண்டிருக்கும்போது, மாணவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து அறப்போர் ஊர்வலம் நடத்தியது? தலைமை தாங்கியதாகவும், ஆவேசமாகப் பேசி, பிற மாணவர் எழுச்சிக்குக் காரணமாகி ஊர் அமைதிக்கு ஊறு விளைவித்ததாகவும் அன்று மாலையில் என்னைப் பெயரளவில் கைதுசெய்து காவல் நிலையத்தில் வைத்திருந்தார்களல்லவா? பரபரப்புச் செய்தி தரும் தினத்தாள் ஒன்று, மாலைப் பதிப்பில் என் பெயரையும், கைதானவர்களில் ஒருவராக வெளியிட்டதும், பிறகு அன்றிரவே, கல்லூரித் தலைவர்; கல்வி அமைச்சர் முதலியோர் கூடிப்பேசி மாணவர்கள் விடுதலை ஆனதும் உனக்குத் தெரிந்தது தானே? அதை அவளிடம் நான் சொல்லவில்லைதான; உண்மையை மறைக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு அல்ல; என்னைப் பற்றியும் என் திறமை பற்றியும் நானே பெருமை பேசிக்கொள்ளக்கூடாது என்ற என் தன்னடக்கத்தால் தான்."

'ஆம் மாலா' நான் பெயரளவில் கைதானது உண்மைதான்; ஆனல் திருடனுகவோ, கொலைகாரனுகவோ அல்ல. என் விழியனைய மொழியின் வாழ்வுக்காக, என் உணர்ச்சிக் குமுறலை உடனெுத்த மாணவர் எதிர்ப்பு ஊர்வலத்துமூலம் கொட்டினேன். சில மணி நேரங்கள் காவல் நிலையத்தில் இருந்ததும் உண்மைதான். ஆனல் நீ என்னைப்பற்றி நீயே அறிந்து பெருமைப்படுவாய் என்று எண்ணி இருந்தேன் ஆனல் நீ..."

"மொழிக்குப்போனல் என்ன, கொலைக்குப்போனல் என்ன? சிறை சிறைதானே? நாளை, என்னைச் சிறைசென்றவன் மனைவி என்று தானே, பிறர் பேசுவார்கள்? இதை முன்பே எனக்குச் சொல்லியிருந்தீர்களானல், நான் உங்களை விரும்பிப் பழகியிருப்பேனு என்பதே ஐயம்தான்."

"மாலா!" உயர்ந்து எழும்பிய என் குரல் சோர்ந்துவிழுந்தது. அவள்தான மாலாவா? இவளையா என் இதயம் விரும்பியது? மலர்க் குவியலில் இடிவிழுந்ததைப்போல, என் இதயத்தில் விழுநத அடி அது!

"நான் வருகிறேன்" பெருந் தன்மையாகச் சிரிக்கவும், கம்பீரமாகப் பார்த்து வெளியே வரவும் முயன்றேன். எங்கே? இதயத்தின் உயிர்ப்பூசசியின் நாடி நரம்புகளை எல்லாம் இழுத்துக்கொண்டிருக்கும் போது கமபீரமும் பெருந்தன்மையும் ஒரு கேடா? படியைவிட்டு இறங்கும் போது திரும்பிப்பார்த்தேன். அவள் கண்களைத் துடைத்துக்கொண்டிருந்ததாக எனக்கு ஒரு பிரமை!

அவ்வளவுதான் நண்பா! கதை முடிந்துவிட்டது. நீ சிரிப்பாய்! என்னடா இது உலகத்தில் இல்லாத காதல்? எல்லோர் வாழ்விலும் ஏறத்தாழ நடைபெறும் சர்வசாதாரணமான நிகழ்ச்சிதானே என்று கூடக் கேட்கலாம்.

ஆனல், என் மனம் உனக்குத் தெரிந்ததுதானே? என் இதயக்கடலுள்ளே பொங்கியெழுந்து ஆர்ப்பரிக்கும் கொள்கையலைகள் தொட்டுத் தழுவும்கடலின்மணற்கரையாக அவளை நினைத்திருந்தேன், அவளோ எதையோ தின்று எப்படியோ புழுதி

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

யில் நெளியும் ஓர் அற்பப் புழுவாகத் தோன்றுகிருள்!

திருச்சிநகரின் வீதிகள் முழுதும் அலேந்தேன். மலேக்கோட்டையையும் சரணடைந்தேன். மனப்புண் சீழ்பிடிக்கத்தான் செய்ததேயொழிய, ஆறும் வழியைக்காணேம். ஒரு காலத்தில் நாங்கள் அமர்ந்திருந்த வேப்பமரத்தினடியிலிருந்துகொண்டு உனக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன். அப்பொழுது மலரையும் உதிர்த்து ஒருவிதமான மணத்தையும் அளித்த மரத்திலிருந்து, இப்பொழுது மஞ்சள்நிற இலேகள் இற்று விழுகின்றன, என் ஆசையைப்போல!

மனம்போகும் போக்கு, கால் போகும் வழி போகின்றேன். எப்பொழுதாவது ஒருநாள் உன்னேச் சந்தித்து மனம்விட்டுப் பேச என்ருவது ஒரு நாள் வருவேன்.

உன் அன்புக்குரிய,

சாரங்கன்;

கடிதத்தைப் படித்து முடித்த என் மனேவியின் கண்கள் கலங்கி நின்றன. கண்களேத் துடைத்துக் கொண்டாள்.

"ஏன் அழுகிருய்?" என்றேன்.

"ஒன்றுமில்லே. ஆமாம், அவர் இப்பொழுது எங்கிருக்கிருர்? திரும்ப வந்து உங்களேச் சந்தித்தாரா?" என்று கேட்டாள்.

"அவன் மனத்தடுமாற்றத்துடன் ஊரெல்லாம் அலேந்துப் பின் இரயிலில் அடிபட்டு மாண்டுவிட்டான்."

"ஐயோ! பாவம்! தற்கொலேயா?"

"அப்படித்தான் பஞ்சாயத்தார்கள் தீர்ப்புச்செய்தார்கள். ஆனுல் அவன் நிச்சயம் தற்கொலே செய்துகொண்டிருக்கமாட்டான். அவனே எனக்கு நன்கு தெரியும். உள்ளத்தில் விழுந்த அடி, உணர்ச்சிகளே மறக்கடித்திருக்கும். இரயிலின் சப்தம்கூடக் காதுகளில் விழாத அளவிற்கு துயரத்தில் மூழ்கி அவன் நடந்துகொண்டிருக்கும்போது, தற்செயலாக அவ்விபத்து நடந்திருக்கவேண்டும். அந்த மாற்றம், அவனே ஓர் மிகச்சிறந்த அரசியல் வாதியாக்கியிருக்கும். என் நாடு கொடுத்துவைத்தது அவ்வளவுதான்."

எங்கோபார்த்தவாறு என் மனேவி பெருமூச்செறிந்தாள். ★

அறிக்கை:—

"திராவிடநாடு"

1.	வெளியாகும் இடம்	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை
3.	அச்சிடுவோரின் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
4.	வெளியிடுவோர் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
5.	ஆசிரியர் பெயர்	...	சி. என். அண்ணுதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
6.	பத்திரிக்கையின் உரிமையாளர்களுடைய பெயர்களும், முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும்		சி. என். அண்ணுதுரை 86, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். அண்ணுதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

11—3—62 (ஒப்பம்) சி. என். அண்ணுதுரை.
வெளியிடுவோர்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.